# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | SC.88/2015 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | அ.சா-07 (PW- 07) |
| பெயர் | :- | சிவா |
| தேதி | :- | 14-07-2025 |

**மனு அனுமதிக்கப்பட்டு சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

எனக்கு 19.10.2013 ஆம் தேதியன்று பகல் சுமார் 12.30 மணியளவில் எனக்கு தகவல் கிடைத்தது. எனக்கு யார் தகவல் சொன்னது என்றால் கிராம உதவியாளரும் பொதுமக்களும். உதவியாளர் கைபேசியில் தகவல் சொன்னார். பொதுமக்கள் நேரடியாக சொன்னார்கள். அப்போது நான் எங்கு இருந்தேன் என்றால் தற்போது நினைவில்லை.

சம்பவ இடத்தில் நான் அன்று பகல் சுமார் 12.30 மணியளவில் இருந்தேன். நான் அங்கு சென்றபோது காவல் துறையினர் இருந்தனரா என்றால் கூட்டமாக இருந்தனர். காவல் துறையினர் இருந்தனரா என்று நான் கவனிக்கவில்லை. சம்பவம் நடந்த இடம் நான் அப்போது கிராம நிருவாக அலுவலராக பணிபுரிந்த எல்லைக்கு உட்பட்டது என்றால் சரிதான். நான் வழக்குச் சம்பவம் குறித்து புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்று யாரையும் விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை. நான் அங்கு சென்றபின் எவ்வளவு நேரம் கழித்து காவல் துறையினர் வந்தனர்

என்றால் பகல் 2.30 மணியளவில் கன்னங்குறிச்சி காவல் நிலைய ஆய்வாளர் வந்தார். அதுவரை நான் அங்குதான் இருந்தேன் என்றால் சரிதான். வழக்குச் சம்பவம் குறித்து என்னுடைய மேல் அதிகாரிக்கு வாய்மொழி மூலம் தகவல் சொன்னேன். அங்கு உதவி காவல் ஆணையர் வந்தாரா என்றால் நான் காவல் ஆய்வாளரைதான் பார்த்தேன். நான் தன்னிச்சையாக அந்த வீட்டிற்குள் சென்று பார்த்தேனா என்றால் இல்லை. நான் சென்றபின் அங்கு அவசர ஊர்தி வந்ததா என்றால் வந்தது. எப்போது வந்தது என்று நேரம் எனக்கு தற்போது நினைவில்லை. நான் சென்றபின் எவ்வளவு நேரம் கழித்து வந்தது என்றும் நினைவில்லை. பொதுமக்களை காவல் துறையினர் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா இல்லையா என்று எனக்கு தெரியவில்லை. காவல் ஆய்வாளர் சொல்ல சொல்ல அவருக்கு உதவியாக இருந்த காவலர் பார்வை மகசரும் மாதிரி வரைபடமும் எழுதினார். அவைகள் வீட்டின் உள்ளே வைத்து எழுதப்பட்டதா அல்லது வெளியே வைத்து எழுதப்பட்டதா என்றால் இரு இடங்களிலும் எழுதினார்கள். அந்த வீடு எத்தனை மாடி கொண்ட குடியிருப்பு என்றால் அது மெத்தை வீடு எத்தனை அடுக்கு என்று நான் கவனிக்கவில்லை. நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றும் அதனால்தான் எத்தனை மாடி வீடு என்று எனக்கு தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் எவ்வளவு நேரம் இருந்தேன் என்று தற்போது நினைவில்லை. மீண்டும் என்னை காவல் துறையினர் எப்போது அழைத்தனர் என்றால் 30.10.2013 அன்று சுமார் 10.15 மணி-யளவில் அழைத்தனர். காவல் ஆய்வாளர் அழைத்தார். அழைத்தபோது நான் எங்கு இருந்தேன் என்று எனக்கு நினைவில்லை. 10.15 மணிக்கு என்னை அழைத்தார். 10.20 மணிக்கு நான் அங்கு இருந்தேன். என்னை

அழைத்தபோதே ஒருவரை பிடித்து வைத்திருப்பதாக சொல்லி அழைத்தாரா என்றால் ஆமாம். அந்த நபரை எப்போது பிடித்தார் எங்கு பிடித்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சென்றபோது சின்ன முனியப்பன் கோவில் பகுதியில் எந்த பக்கத்தில் இருந்தோம் என்றால் அது எனக்கு நினைவில்லை. நான் சென்றபோது காவல் ஆய்வாளர் இருந்தார். எத்தனை காவலர்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. எவ்வளவு நேரம் ஒப்புதலுரை வாங்கினார் என்றால் நேரம் நினைவில்லை. 10.30 மணிக்கு பதிவு செய்ய ஆரம்பித்தார். ஒப்புதலுரையை யார் எழுதியது என்றால் காவல் ஆய்வாளர் சொல்ல சொல்ல உடன் இருந்த காவலர் எழுதினார்.

JJ Gate way என்பது எங்கு உள்ளது என்றால் அஸ்தம்பட்டி காவல் நிலையத்திற்கு எதிரில் ரோகினி திரையரங்கத்திற்கு அருகில் உள்ளது. அது வீட்டு மனை பிரிவு என்றால் சரிதான். அது முட்புதராக இருந்தது. காவல் நிலையத்திற்கு எதிரே உள்ளது. எத்தனை அடி என்று எனக்கு தெரிய-வில்லை. அது கன்னங்குறிச்சி முதன்மை சாலையில் petrol bunk எதிரில் உள்ளது என்றால் சரிதான். JJ Gate way பகுதியில் எந்த இடத்திலிருந்து பொருட்களை காவல் துறையினர் கைப்பற்றினார்கள் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன பகுதியில் எந்த இடத்திற்கு காவல் துறையினர் சென்றனர் என்றால் இரவு நேரம் என்பதால் எந்த பகுதி என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. அங்கு தெருவிளக்கு அல்லது மின் விளக்கு வெளிச்சம் இருந்ததா என்றால் அது எனக்கு தற்போது நினைவில்லை. அங்கு சென்றபோது நேரம் சுமார் 1.00 மணி இருக்கும். அன்று 31.10.2013 ஆகும். நாங்கள் புறப்பட்ட நேரம்

எனக்கு நினைவில்லை. அங்கு 1 மணி நேரம் இருந்திருப்போமா என்றால் நேரம் எனக்கு நினைவில்லை. சின்ன முனியப்பன் கோவிலுக்கும் JJ Gate way இடத்திற்கும் இடையே சுமார் 1 கி.மீ தூரம் இருக்குமா என்றால் 2 முதல் 3 கி.மீ தூரம் இருக்கும். சின்னதிருப்பதிக்கும் JJ Gate way க்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தூரம் எனக்கு நினைவில்லை. அங்கிருந்து புறப்பட்ட நேரம் எனக்கு நினைவில்லை. அங்கிருந்து நான் வீட்டிற்கு சென்றேனா அலுவலகம் சென்றேனா என்று நினைவில்லை. எங்கு சென்றேன் என்றே எனக்கு நினைவில்லை.

JJ Gate way யார் எழுதியது என்றால் காவல் ஆய்வாளர் சொல்ல காவலர் எழுதினார். ஒப்புதலுரை எழுதிய அதே காவலரா என்று எனக்கு தெரியவில்லை. சரளை என்ற ஊர் எந்த வருவாய் வட்டத்திற்கு உட்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த ஊர் சேலம் - கோயமுத்தூர் தேசிய நெடுஞ்சாலைக்கு கிழக்கு பக்கத்தில் உள்ளதா மேற்கு பக்கத்தில் உள்ளதா என்று எனக்கு நினைவில்லை. சரளை ஊருக்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் காவல் துறையினரின் நான்கு சக்கர வாகனத்தில் சென்றேன். அந்த வாகனத்தின் பெயர் எனக்கு நினைவில்லை.

காவல் துறையினர் வழக்குச் சொத்தை கைப்பற்றியதாக சொல்லும் முட்புதர் என்ன வகையானது என்று எனக்கு நினைவில்லை. சரளை ஊரை தாண்டி சென்றோமா அல்லது முன்தாகவே அந்த இடம் இருந்ததா என்றால் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. அங்கு மகசர் ஆவணத்தை எழுதியது யார் என்று கேட்டால் தற்போது எனக்கு நினைவில்லை. அங்கிருந்த வந்தபின் நான் எங்கு சென்றேன் என்று கேட்டால் கன்னங்குறிச்சி காவல் ஆய்வாளருக்கு மேலும் ஒரு தகவல் கிடைத்ததால்

அவர் என்னை அங்கு அழைத்து சென்றார். தகவல் கிடைத்த நேரம் எனக்கு நினைவில்லை. சரளை ஊரிலிருந்து நேராக அந்த இடத்திற்கு சென்றோமா என்றால் ஆய்வாளர் சொன்ன இடத்திற்கு சென்றோம். நேராக சென்றோமா என்று நினைவில்லை. சரளை ஊரிலிருந்து கிளம்பிய நேரம் எனக்கு நினைவில்லை. அந்த இடத்திற்கு சுமார் 9.30 மணிக்கு சென்றோம்.

கன்னங்குறிச்சி காவல் நிலையத்திலிருந்து புது ஏரிக்கரைக்கு 3 வழிகள் உள்ளன என்றால் சரிதான். அதில் எந்த வழியாக சென்றேன் என்று கேட்டால் எனக்கு நினைவில்லை. புதுஏரி என்பது 10 ஏக்கர் இருக்கும் என்றால் அது எனக்கு தெரியவில்லை. அது நான் பணிபுரிந்த கிராம எல்லைக்கு உட்பட்ட பகுதி என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து புதுஏரிக்கரை 1 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் அதற்கும் அதிகமாக இருக்கும். சரியான தூரம் எனக்கு தெரியவில்லை. நானும் காவல் துறையினரும் ஒரே வாகனத்தில் சென்றோமா என்றால் எனக்கு தற்போது நினைவில்லை. ஏரிக்கரையில் எந்த பகுதியில் அந்த நபர் இருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஏரிக்கரையின் மொத்த நீளம் 500 மீட்டர் இருக்குமா என்றால் எனக்கு நினைவில்லை.

ஒப்புதலுரை எவ்வளவு நேரம் வாங்கினார்கள் என்றால் சுமார் 9.45 மணிக்கு பதிவு செய்ய தொடங்கினார்கள். அங்கிருந்து புறப்பட்டபோது எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் எனக்கு நினைவில்லை. ஏரிக்கரையின் கிழக்கு பகுதியில் மன்னார்பாளையம் தார் சாலை செல்கிறது என்றால் சரிதான். அங்கிருந்து நேரடியாக காவல் நிலையத்திற்கு வந்தேமா என்றால் இல்லை. எங்கு சென்றோம் என்றால் ரோகினி திரையரங்கிற்கு அருகிலுள்ள அண்ணா சாலையில் உள்ள தீனதயாளன் என்பவர் வீட்டிற்கு சென்றோம்.

கன்னங்குறிச்சி காவல் நிலையம் வழியாக வருவதுதான் நேர் வழி என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு வந்துதான் சென்றோம் என்றும் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அண்ணா சாலையில் 4 வீதி உள்ளது என்றால் சரிதான். அதில் எந்த வீதிக்கு சென்றோம் என்றால் எனக்கு தற்போது நினைவில்லை. தீனதயாளன் வீட்டிற்குள் நான் செல்லவில்லை என்றால் சரிதான். காவலர்கள் சென்றார்களா என்று எனக்கு நினைவில்லை. தீனதயாளன் சென்றார். நான் அங்கு சென்றபோது சுமார் காலை 11.30 மணி இருக்கும். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்தனரா என்றால் எனக்கு நினைவில்லை.

தீனதயாளனிடமிருந்து எத்தனை உரூபாய் பணத்தாள்களை காவல் துறையினர் கைப்பற்றினர் என்று காவல் துறையினரிடம் சொன்ன வாக்குமூலத்தில் நான் சொன்னேனா என்று நினைவில்லை. ஆனால் அது 1000/- உரூபாய் தாள்கள். வீட்டின் எந்த பகுதியில் இருந்து அவர் பணத்தை எடுத்தார் என்று நான் பார்க்கவில்லை. அந்த மகசரை காவல் ஆய்வாளர் எழுதினாரா காவலர் எழுதினாரா என்று எனக்கு நினைவில்லை. பணம் கைப்பற்றியபின் நான் காவல் நிலையத்திற்கு சென்றேனா அல்லது அலுவலகர் சென்றேனா என்று எனக்கு நினைவில்லை. அன்று நான் அலுவலக பணி எதுவும் செய்யவில்லையா என்றால் தற்போது நினைவில்லை.

சம்பவ இடத்தில் தரையில் யார் கிடந்தது, கட்டில்மேல் யார் யார் கிடந்தது என்று கேட்டால் ராஜசேகர் கட்டில்மேல் கிடந்தார். ராமகிருஷ்ணன் தரையில் கிடந்தார். வேறு யாரும் இருந்தனரா என்று எனக்கு நினைவில்லை.

நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் அதனால்தான் நினைவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. காவல் துறையினர் என்னை எந்த இடத்திற்கும் வரச்சொல்லி அழைக்க-வில்லை என்றும் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போன்று எந்த இடத்திற்கும் செல்லவில்லை என்றும் யாரும் என் முன்னிலையில் ஒப்புதலுரை அளிக்கவில்லை என்றும் யாரும் எந்த இடத்திலிருந்தும் என் முன்னிலையில் எந்த பொருளையும் எடுத்துக்கொடுக்கவில்லை என்றும் என் முன்னிலையில் எந்தவொரு பார்வை மகசரும் மாதிரி வரைபடமும் ஒப்புதலுரையும் கைப்பற்றுதல் மகசர்களும் தயாரிக்கப்படவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் இட்டுவிட்டு காவல் துறையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றும்  சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.